தொல் தமிழரின் தங்கத் தோடும் தொங்கட்டானும்

வையை நாகரிகத்தின் மகத்தான சான்றுகள்

வையை ஆற்றங்கரை நாகரிகம் என்பது வெறும் நிலம் சார்ந்த ஒன்றல்ல; அது சங்கத் தமிழரின் பண்பாட்டு வேர்களின் உயிர்நாடியாகும். சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகள் வெறும் கற்பனை நயங்கள் அல்ல, அவை மண்ணில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் உண்மைகள் என்பதற்கு இன்றைய அகழாய்வுகள் அசைக்க முடியாத சான்றுகளை வழங்குகின்றன. தற்போதைய மதுரை மாநகரம் பிற்காலத்தில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருந்தாலும், அதன் ஆதிவேர் சங்க காலப் பாண்டியர்களின் தலைநகரான **ஆதிமதுரையாகிய 'கூடல்'** மாநகரத்தில் பொதிந்துள்ளது.



முத்தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவரான **நக்கீரன்** வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கூடல் மாநகரம், கால ஓட்டத்தில் மண்ணுக்குள் புதைந்து போனது. இதைக் கீழடி மற்றும் அதன் அருகிலுள்ள மணலூர் அகரம் கொந்தகை பகுதிகளில்

மேற்கொள்ளப்படும் அகழாய்வுகள் தொடர்ச்சியாக வெளிச்சத்திற்கு வந்துகொண்டு இருக்கின்றன. வையை ஆற்றங்கரை நாகரிகத்தின் உன்னதத்தையும், தமிழர்களின் நகரக் கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேன்மையையும் விளக்கும் ஒரு காலக் கண்ணாடியாக இந்த அகழாய்வுத் தரவுகள் திகழ்கின்றன. இவை வெறும் அகழாய்வு முடிவுகள் அல்ல; மண்ணுக்கு அடியில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு செழுமையான நகர நாகரிகத்தின் மீட்சி ஆகும்.

மண்ணிலிருந்து மீண்ட சங்கப் பொற்காலம்

தொல்லியலாளர் **திரு அமர்நாத் ராமகிருஷ்ணன்** அவர்கள் முதன்முதலில் தோண்டிக் கண்டறிந்த **கீழடி அகழாய்வுகள்** தமிழ்ச் சமூகத்தின் பொருளாதார வலிமையையும், கலை நுணுக்கத்தையும் தொடர்ந்து பறைசாற்றி வருகின்றன. கீழடி மற்றும் அகரம் பகுதிகளில் நடைபெற்ற ஏழாம் கட்ட அகழாய்வு, தமிழர்களின் உலோகத் தொழில்நுட்ப மேன்மைக்குச் சான்றாகப் பல தங்க ஆபரணங்களை வழங்கியுள்ளது.



- **தங்கத் தொங்கட்டான்:** அகரத்தில் மண் அடுக்குகளுக்கு இடையில் **ஓர் அழகிய** 'தங்கத் தொங்கட்டான்' (காதணி) கண்டெடுக்கப்பட்டது. இதன் நுணுக்கமான வேலைப்பாடுகள் அக்காலக் கைவினைஞர்களின் அபாரமான உலோகத் தொழில்நுட்பத்தை உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

- **அறுகோணத் தங்க ஆபரணம்:** அகரம் பகுதியில் புள்ளிகளால் அலங்கரிக்கப்பட்ட 'அறுகோணத் தங்க ஆபரணம்' ஒன்று கண்டறியப்பட்டது. இதன் நடுவில் துளையிடப்பட்டு, கழுத்தில் எளிதாக அணியும் வகையில் சிறிய இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது பண்டைய தமிழரின் ஆபரண வடிவமைப்பில் இருந்த நவீனத்துவத்தை மெய்ப்பிக்கிறது.

- **வணிக மையமாக அகரம்:** அகரத்தில் குண்டுமணி வடிவத் தங்கக் கம்மல் கண்டெடுக்கப்பட்டது. இதற்கு முன்னதாக நடைபெற்ற ஆறாம் கட்ட அகழாய்வில் '**காசுகள்** கண்டறியப்பட்டன' என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய அரிய தங்கக் கண்டுபிடிப்புகள், பண்டைய காலத்தில் அகரம் பகுதி ஒரு செழிப்பான வணிக நகரமாகத் திகழ்ந்திருக்கக் கூடும் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

- **பௌதிகச் சான்றுகள் :** கீழடி அகழாய்வில் கிடைத்துள்ள ஆபரணங்கள் வெறும் அணிகலன்கள் மட்டுமல்ல; அவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் உலோகவியலில் (Metallurgy) அடைந்திருந்த உச்சத்தைத் தெளிவுபடுத்துகின்றன. இவை சங்க இலக்கியங்கள் விவரிக்கும் பொற்கால வாழ்விற்கு ஒரு பௌதிகச் சான்றாகத் திகழ்கின்றன.

ஆனால் இந்தத் தங்க ஆபரணங்கள் யாருடையவை? எவ்வாறு பூமிக்குள் புதைந்தன? என்ற கேள்விகள் எழுகின்றன. இந்தக் கேள்விகளுக்கான பதில் பரிபாடலில் உள்ளது. சங்கப் புலவர் நல்வழுதியார் இதற்கான பதிலை அளித்துள்ளார்.

புதுப்புனல் விழாவும் - பொன் அணிகலனும்

சங்ககாலப் புலவரான **நல்வழுதியார்** (**பரிபாடல் 12)** வையை நதியில் புதுவெள்ளம் பெருகி ஓடி வரும் அழகையும், ஆற்றில் மக்கள் நீராடி மகிழ்ந்த காட்சிகளையும் மிக விரிவாக வர்ணித்துப் பாடியுள்ளார். காற்றும் மின்னலும் வந்து வானமே இருளாயிற்று. சாரல் மழை மேற்குத் தொடர்ச்சி மலையை முற்றுகையிட்டு மழை பொழிந்தது. நாகம், அகில், வழை, ஞெமை, சந்தனம், தகரம், ஞாழல் முதலான மரக்கிளைகளைச் சுமந்து கொண்டு வையையில் வெள்ளம் வருகிறது. இது **“நளி கடல் முன்னியது போல்”** (கடல் கரையைக் கடந்து வந்தது போன்று, **கடல்கோள்** போன்று, **பெருஞ் சுனாமி** போன்று) இருந்தது. கடல்கோளின் போது கடல் அலைகள் வந்து தாக்கியதைப் போன்று, வையை ஆற்றின் வெள்ளம் மதுரை மதிலைத் தாக்குகிறது என்ற செய்தியை மக்கள் கேட்டனர். மின்னும் அணிகலன்களை அணிந்து கொண்டனர். வையை ஆற்றில் புதுவெள்ளம் பொங்கி வரும்போது, கூடல் என்ற மதுரையில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ஆற்றுக்குச் சென்று திருவிழா போலக்

கொண்டாடி மகிழ்கின்றனர். அப்படி நீராடும் பெண்கள், தங்கத் தகடுகளால் செய்யப் பெற்ற பூக்களை அணிந்திருந்தனர்.



வெள்ளத்தில் விளையாடச் செல்லும் பெண்கள் அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளைச் சரிசெய்து கொள்கின்றனர். இதை, நல்வழுதியார்


"மின் அவிர் ஒளி இழை வேயு மோரும்,
பொன் அடர்ப் பூம் புனை திருத்துவோரும்..."

என்று நம் கண்முன் காட்டுகிறார். அதாவது, வையை ஆற்றில் நீராடும்போது தங்களின் **'பொன் அடர்ப் பூம் புனை'** (பொன் தகட்டால் ஆன பூ வடிவிலான அணிகலன்) கழன்று ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விடக் கூடாது என்பதற்காக, நம் குலப் பெண்டிர் அதனை நன்கு திருத்தி இறுக்கி அணிந்து கொண்டு வையையில் நீராடி மகிழ்ந்தனர் எனப் பாடல் விவரிக்கிறது.

மேலும், பரிபாடலில், *"சுடுநீர் வினைக் குழையின் ஞாலச்[1] சிவந்த கடி மலர்ப் பிண்டி தன் காதில் செரீஇ..."* என்றொரு முக்கியமான குறிப்பு உள்ளது. காதுவளர்த்த[2] ஒரு தலைவியின் காதுத் துவாரம் தொங்குகிறது. அதில் சிவந்த புதுமலர் ஒன்று தொங்கிக் கொண்டு அழகு சேர்த்ததாம். இந்தக் காட்சியில் விவரிக்கப்பட்டுள்ள 'சுடுநீர் வினைக் குழை' எனப்படும் காதணியே அகரம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட **தங்கத்**

[1] ஞால = நாலுதல், தொங்குதல்
[2] *காது வளர்த்தல் என்பது காதின் மடலைக் கீழ்ப்புறமாக நீளமாக வளர்த்து வடித்தெடுக்கும் ஒரு பாரம்பரியத் தமிழர் பண்பாட்டு முறையாகும்.*

தொங்கட்டானாக இருக்கக் கூடும் என எண்ணத் தோன்றுகிறது. இன்று கீழடி மணல் பரப்பிற்கு அடியில் இத்தகைய நகைகள் கண்டெடுக்கப்படுவது வெறும் தற்செயல் நிகழ்வல்ல. அன்று மக்கள் நீராடும்போது வெள்ளத்தில் இழந்த நகைகளே இன்று கீழடி மணல் அடுக்குகளில் பொதிந்துள்ளன என்ற வரலாற்று உண்மையை இந்த அகழாய்வுக் கண்டுபிடிப்பு உறுதிப்படுத்துகிறது.



தற்காலமும் பொற்காலமும்

இன்றைய மதுரையில் ஓடுவது **'வைகை'** நதியாகும்; ஆனால், சங்ககாலத்தில் பெரும் கடல்கோளுக்கு (பெருஞ் சுனாமி) முன்னர் ஓடியது **'வையை'** நதியாகும். வையை நதியில் ஏற்பட்ட புதுவெள்ளப் பெருக்கில் நீராடிய போது, பெண்களின் காதுகளிலிருந்து கழன்று ஆற்றுடன் அடித்துச் செல்லப்பட்ட தங்க அணிகலன்கள் ஆற்றுப் படுகையின் மணல் அடியில் புதைந்துள்ளது. பல நூற்றாண்டுகள் கடந்து, இன்றைய நாட்களில் அவற்றை நம் தொல்லியலாளர்கள் தோண்டி எடுத்துள்ளனர்.

எனவே, தற்காலத்தில் கீழடி மணலூர் அகரம் என்று ஊர்கள் உள்ள இடங்களை வெறும் சிற்றூர்கள் என்று பார்க்காமல், சங்கம் வைத்துத் தமிழாராய்ந்த பொற்காலத்தில் இருந்த 'கூடல்' என்ற மதுரையின் நீட்சியாகவே நாம் பார்க்க வேண்டும்.

முடிவுரை

கீழடி மணலூர் மற்றும் அகரம் அகழாய்வு முடிவுகளையும், பரிபாடல் வரிகளையும் இணைத்துப் பார்க்கும்போது, இந்த ஊர்களின் கீழே வையை

ஆற்றங்கரையில் ஒரு மிகச் செழிப்பான **'தமிழரின் நகர நாகரிகம்'** நிலவியது உறுதிப்படுகிறது. அன்று வையை நதியின் புதுவெள்ளத்தில் மக்கள் நீராடியபோது கழன்று விழுந்து மணலில் புதைந்த நகைகளே, இன்று அகழாய்வில் கண்டெடுக்கப்படுகின்றன. எனவே, கீழடி, மணலூர், அகரம் போன்ற பகுதிகளைத் தனித்தனிச் சிற்றூர்களாகப் பார்க்காமல், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த 'கூடல்' மாநகரின் விரிந்த நீட்சியாகவே நாம் கருத வேண்டும். சங்கப் பாடல்களின் வரிகள் வெறும் கற்பனையல்ல, அவை மண்ணில் வாழ்ந்த தமிழர்களின் உண்மையான வாழ்வியல் முறை என்பதைத் தெள்ளத்தெளிவாக நிரூபிக்கின்றன. தமிழரின் உன்னத உலோகக் கலைக்கும், பண்பாட்டு மாண்பிற்கும் சிறந்த வரலாற்றுச் சான்றாக விளங்கும் இந்தப் புதையல்களைப் பாதுகாப்பதும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதும் நமது கடமையாகும், வரலாற்றுப் பெரும் பொறுப்பும் ஆகும்.

கட்டுரையாளர்
காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன்,
மேனாள் துணைப் பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்.
புலனம் : +91 9443501912
மின்னஞ்சல் : kalairajan26@gmail.com

https://kalairajan26.blogspot.com/2023/03/blog-post_30.html



(தொல்லியலாளர் திரு அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்கள் தோண்டிய ஆய்வுக் குழிகளுக்குச் சுமார் 600 மீட்டர் நேர் கிழக்கே
***மணலூர் கண்மாய்க் கரையில் புதைந்துள்ள நந்தி**)*

பின்னிணைப்பு –

பரிபாடல் – 12 - சொல் பிரிப்புப் பதிவு

வளி பொரு மின்னொடு வான் இருள் பரப்பி,
விளிவு இன்று, கிளையொடு மேல் மலை முற்றி,
தளி பொழி சாரல் ததர் மலர் தாஅய்;
ஒளி திகழ் உத்தி உருகெழு நாகம்,
அகரு, வழை, ஞெமை, ஆரம், இனைய;
தகரமும், ஞாழலும், தாரமும், தாங்கி,
நளி **கடல் முன்னியது** போலும், தீம் நீர்
வளி வரல் வையை வரவு.
'வந்து மதுரை மதில் பொரூஉம், வான் மலர் தாஅய்,
அம் தண் புனல் வையை யாறு' எனக் கேட்டு,
மின் அவிர் ஒளி இழை வேயுமோரும்,
பொன் அடர்ப் பூம் புனை திருத்துவோரும்,
அகில்கெழு சாந்தம் மாற்றி ஆற்றப்
புகைகெழு சாந்தம் பூசுவோரும்,
கார் கொள் கூந்தல் கதுப்பு அமைப்போரும்,
வேர் பிணி பல் மலர் வேயுமோரும்,
புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்,
கட்டிய கயில் அணி காழ் கொள்வோரும்;
வாச நறு நெய் ஆடி, வான் துகள்
மாசு அறக் கண்ணடி வயக்கி, வண்ணமும்
தேசும் ஒளியும் திகழ நோக்கி,
வாச மணத் துவர் வாய்க் கொள்வோரும்;
இடு புணர் வளையொடு தொடு தோள்வளையர்,
கட்டு வடக் கழலினர், மட்டு மாலையர்,
ஓசனை கமழும் வாச மேனியர்,
மட மா மிசையோர்,
பிடிமேல் அன்னப் பெரும் படை அனையோர்
கடு மா கடவுவோரும், களிறுமேல் கொள்வோரும்,

வடி மணி நெடுந் தேர் மா முள் பாய்க்குநரும்,
விரைபு விரைபு மிகை மிகை ஈண்டி,
ஆடல் தலைத்தலை சிறப்ப, கூடல்
உரைதர வந்தன்று, வையை நீர்; வையைக்
கரை தர வந்தன்று, காண்பவர் ஈட்டம்;
நிவந்தது, நீத்தம் கரைமேலா; நீத்தம்
கவர்ந்தது போலும், காண்பவர் காதல்.
முன் துறை நிறை அணி நின்றவர் மொழி மொழி
ஒன்று அல, பலபல உடன் எழுந்தன்று; அவை
எல்லாம் தெரியக் கேட்குநர் யார்? அவை
கில்லா கேள்வி கேட்டன சிலசில:
ஒத்த குழலின் ஒலி எழ; முழவு இமிழ்,
மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி,
ஒத்து அளந்து; சீர் தூக்கி; ஒருவர் பிற்படார்;
நித்தம் திகழும் நேர் இறை முன்கையால்
அத் தக அரிவையர் அளத்தல் காண்மின்.
'நாணாள்கொல் தோழி! "நயன் இல் பரத்தையின்
தோள் நலம் உண்டு, துறந்தான்" என, ஒருத்தி
யாணர் மலி புனல் நீத்தத்து இரும் பிடி
சேண வெரிநின் சிறந்தானோடு ஏறினாள்,
நாணுக் குறைவு இலள்; நங்கை மற்று?' என்மரும்,
'கோட்டியுள் கொம்பர் குவி முலை நோக்குவோன்
ஓட்டை மனவன்; உரம் இலி' என்மரும்,
'சொரிந்ததூஉம் சொற்றதூஉம் பற்றாள்; நிறம் திரிந்தாள்;
நெஞ்சத்தை நீத்தாள், நெறி செல்வான் பின் நிறை
அஞ்சிக் கழியாமோ, அன்பு உற்றால்?' என்மரும்,
'பூண் ஆரம் நோக்கிப் புணர் முலை பார்த்தான், உவன்.
நாணாள் அவனை, இந் நாரிகை' என்மரும்
அமிர்து அன நோக்கத்து அணங்கு ஒருத்தி பார்ப்ப,
கமழ் கோதை கோலாப் புடைத்து, தன் மார்பில்
இழையினைக் கை யாத்து, இறுகிறுக்கி வாங்கி,

'பிழையினை' என்ன, பிழை ஒன்றும் காணான்,
தொழுது பிழை கேட்கும் தூயவனைக் காண்மின்.
'பார்த்தாள், ஒருத்தி நினை' என, 'பார்த்தவளைப்
பொய்ச் சூளாள் என்பது அறியேன், யான்' என்று இரந்து,
மெய்ச் சூள் உறுவானை, மெல்இயல், 'பொய்ச் சூள்' என்று,
ஒல்லுவ சொல்லாது, உரை வழுவச் சொல்ல;
உறைத்தும் செறுத்தும் உணர்த்துவானைப்
பூ எழில் வண்ண நீர் பூரித்த வட்டு எறிய,
வேல் எழில் உண்கண் எறி நோக்கம் பட்ட புண்
பாய் குருதி சோர, பகை இன்று உளம் சோர,
நில்லாது நீங்கி நிலம் சோர; அல்லாந்து
மல் ஆர் அகலம் வடு அஞ்சி, மம்மர் கூர்ந்து,
எல்லாத் துனியும் இறப்ப, தன் காதலன்
நல் ஏர் எழில் ஆகம் சேர்வித்தல் எஞ்ஞான்றும்
வல்லதால், வையைப் புனல்.
என ஆங்கு
மல்லிகை, மௌவல், மணம் கமழ் சண்பகம்,
அல்லி, கழுநீர், அரவிந்தம், ஆம்பல்,
குல்லை, வகுளம், குருக்கத்தி, பாதிரி,
நல் இணர் நாகம், நறவம், சுரபுன்னை,
எல்லாம் கமழும் இரு சார் கரை கலிழ;
தேறித் தெளிந்து, செறி இருள் மால் மாலை;
பாறைப் பரப்பில் பரந்த சிறை நின்று;
துறக்கத்து எழிலைத் தன் நீர் நிழல் காட்டும்:
கார் அடு காலை, கலிழ் செங் குருதித்தே
போர் அடு தானையான் யாறு.
சுடு நீர் வினைக் குழையின் ஞாலச் சிவந்த
கடி மலர்ப் பிண்டி தன் காதில் செரீஇ,
விடு மலர்ப் பூங் கொடி போல நுடங்கி,
அடிமேல் அடிமேல் ஒதுங்கி, தொடி முன்கைக்
காரிகை ஆகத் தன் கண்ணி திருத்தினாள்,

நேர் இறை முன்கை நல்லவள்; கேள் காண்மின்.

துகில் சேர் மலர் போல், மணி நீர் நிறைந்தன்று;

'புனல்' என, மூதூர் மலிந்தன்று, அவர் உரை;

உரையின் உயர்ந்தன்று, கவின்.

போர் ஏற்றன்று, நவின்று; தகரம்

மார்பு அழி சாந்தின் மணல் அளறு பட்டன்று;

துகில் பொசி புனலின், கரை கார் ஏற்றன்று;

விசும்பு கடி விட்டன்று, விழவுப் புனல் ஆங்க.

இன்பமும், கவினும், அழுங்கல் மூதூர்,

நன்பல நன்பல நன்பல வையை!

நின் புகழ் கொள்ளாது, இம் மலர் தலை உலகே.

கார்ப் பருவத்து வையை நீர் விழவணியில் பல் வேறு வகைப்பட்ட இன்பம் கூறி,
'இவ் வகைப்பட்ட இன்பத்தை உடைய நின்னையும் நினைத்திலர்' என,
வையையை நோக்கி, தலைமகன் கேட்ப, தோழி இயற்பழித்தது.

நல்வழுதியார் - பாட்டு

நந்நாகனார் - இசை

பண்ணுப் பாலை - யாழ்

காலம் – கி. மு. மூன்றாம் நூற்றாண்டு

உரை

காற்றும் மின்னலும் வந்து வானமே இருளாயிற்று. சாரல் மழை மேலை மலையை முற்றுகையிட்டு மழை பொழிந்தது. நாகம், அகில், வழை, ஞெமை, சந்தனம், தகரம், ஞாழல் தாரம் முதலானவற்றைச் சுமந்துகொண்டு, வெள்ளமானது வையை ஆற்றில் **கடல் போல் பெருக்கெடுத்து** வந்து மதுரை மதிலைத் தாக்குவதை மக்கள் கேட்டனர். மின்னும் அணிகலன்களைப் பூண்டனர். பொன் தகட்டால் ஆன பூவை அணிந்து கொண்டனர். தம் ஒப்பனையைத் திருத்திக் கொண்டனர். சந்தனம் பூசிக்கொண்டனர். அகில் புகை ஊட்டிக்கொண்டனர். கூந்தலை ஒப்பனை செய்துகொண்டனர். மலர்களைச் சூடிக்கொண்டனர். புட்டகம் என்னும் வண்ண ஆடையை முன்கையில் அணிந்துகொண்டனர். இடுப்பு ஆபரணத்தை அணிந்து கொண்டனர். மணநெய்யும், மணப்பொடியும் போட்டுக் கொண்டனர். கண்ணாடி பார்த்துக்கொண்டனர். வண்ணமும், பளபளப்பும் திகழும்படிச் செய்துகொண்டனர். வாய் மணக்கும் பொருள்களை மென்றனர். கைவளையல், தோள்வளையல், கட்டுவடம், தேன் மணக்கும் மாலை ஆகியவற்றை அணிந்துகொண்டனர். குதிரைகளில் ஏறி வந்து சிலர் வெள்ளத்தைப் பார்த்தனர். பெண்கள் பெண்யானை மேல் சென்றனர்.



ஆண்கள் குதிரை மேலும், ஆண்யானை மேலும், தேர் மேலும் ஏறி ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு விரைந்து சென்றனர். நீரில் ஆடல்விழா ஆங்காங்கே சிறப்புற்றது. கூடல் நகரை உரசிக்கொண்டு வையை நீர் பாய்ந்தது. வையைக் கரைக்குக் காண்பவர் கூட்டம் வந்தது. கரை மேல் உயர்ந்தது கூட்டமா, வெள்ளமா என்று தெரியவில்லை. வெள்ளம் மக்களைக் கவர்ந்தது போல, காதலும் மக்களைக் கவர்ந்தது.

வையைத் துறையில் அணி அணியாக நின்றவர் ஆங்காங்கே பலப்பல பேசிக்கொண்டனர். அவற்றை மனத்தில் வாங்கிக்கொள்ளாமல் பலரும் கேட்டனர். 'கில்லா கேள்வி கேட்டன சில சில' (தெளிவாகக் கேட்கமுடியாதவாறு சில சில சொற்கள் கேட்டன). குழல், முழவு, மத்தரி தடாரி, தண்ணுமை, மகுளி , முதலான இசைக் கருவிகள் சீராக ஒத்து முழங்கின. அந்த இசைக்கேற்ப மகளிரின் வளையல் குலுங்கிற்று.

நன்னடத்தை இல்லாத ஒருவன் பரத்தையைக் கட்டித் தழுவி விட்டுவிட்டுச் சென்றான். அந்தப் பரத்தைக்கு வெட்கம் இல்லையே என்று பேசிக்கொண்டனர். ஒருத்தி அழகன் ஒருவனோடு யானை முதுகில் ஏறிக்கொண்டு வெள்ளத்தில் சென்றாள். அவளுக்கு 'நாணுக் குறைவு இல்லை' என்று பேசிக்கொண்டனர். மன்றத்தில் இருக்கும் பெண் ஒருத்தியின் குவிந்த முலையை ஒருவன் உற்றுப் பார்த்தான். அவனை ஓட்டை மனத்தன், நெஞ்சுரம் இல்லாதவன் என்றனர். ஒருத்தி தன்னை ஒருவன் உரசிக்கொண்டு சென்றதையும், சொன்னதையும் பொருட்படுத்தாமல் சென்றாள். ஒருத்தி அவனிடம் நெஞ்சைப் பறி கொடுத்து அவன் பின் சென்றாள். ஒருத்தி அச்சத்தோடு விலகிச் சென்றாள். அன்பு இருந்தால் இப்படி விலகிச் செல்வாளோ என்று சிலர் பேசிக்கொண்டனர். ஒருவன் ஒருத்தி பூண்டிருந்த ஆரத்தையும், நெருங்கிய முலைகளையும் பார்த்தான். அவள் காட்டிக்கொண்டு நின்றாள். அவளை நாணமில்லாதவள் என்று பேசிக்கொண்டனர்.

ஒரு தூயவள். ஒரு தூயவன். தூயவள் தன் தூயவனை விளையாட்டாகத் தன் மாலையால் அடித்தாள். தன் மார்பில் இறுக்கிப் பிடித்துக்கொண்டே அடித்தாள். "பிழை செய்தாய்" என்று சொல்லிக்கொண்டே அடித்தாள். என்றாலும் அவனிடம் பிழை ஒன்றும் காணவில்லை. அவன் அவளைத் தொழுதுகொண்டே நின்றான். "ஒருத்தி உன்னைப் பார்த்தாள்" என்று சொல்லிக்கொண்டு தூயவள் ஒருத்தி ஊடினாள். 'என்னைப் பார்த்தவள் பொய்யாகப் பார்க்கிறாள் என்று நினைத்தேன்' என்று சொல்லி அவன் சத்தியம் செய்தான் . 'நீ பொய்யாகச் சத்தியம் செய்கிறாய்' என்றாள் அந்தத் தூயவள். இப்படி அவள் உரைக்க, அவன் உணர்த்த ஊடல் நிகழ்ந்தது.

இப்படிப் பேசி ஊடுகையில், அவள் அவன் மேல் வட்டு ஒன்றை எறிந்தாள். அந்த வட்டுக் குண்டில் இருந்த வண்ண-நீர் அவன் மேல் கொட்டியது. அந்த நீர் அவன் மேனியில் இரத்தம் கொட்டி நிலத்தில் பாய்வது போல் இருந்தது. அதனைப் பார்த்த அவள் அவன் மார்பில் காயம் பட்டுவிட்டதே என்று அஞ்சினாள். மயக்கம் கொண்டு அவன் மேல் இருந்த பெருத்த ஊடலை (துனி) விட்டுவிட்டு அவன் மார்பை அணைத்துக்கொண்டாள். இப்படி வையை ஆற்றுப் புனல் எல்லாக் காதல் விளையாட்டுகளையும் செய்ய வல்லது.

மல்லிகை, மௌவல், சண்பகம், அல்லி, கழுநீர், அரவிந்தம், ஆம்பல், குல்லை, வகுளம்,குருக்கத்தி, பாதிரி, நாகம், நறவம், சுரபுன்னை ஆகிய எல்லாப்பூக்களும் கமழும் கரையை இரு மருங்கிலும் கொண்டது வையை ஆறு. அதில் தெளிந்தோடும் நீர், மாலை வேளையில், பாறைப் பரப்பில் தடை பட்டு ஓடுவது வானுலகம் போன்று காட்டப்பட்டது. பாண்டியனின் போர்க்களத்தில் குருதி ஓடுவது போன்று வையை ஆற்றின் வெள்ளநீர் காணப்பட்டது. நல்லவள் ஒருத்தி, மணக்கும் அசோகப் பூவைக் காதில் செருகிக்கொண்டாள். பூத்திருக்கும் மலர்க்கொடி வருவது போல மெல்ல மெல்ல அடி வைத்து அசைந்தாடிக்கொண்டு நடந்துவந்தாள். வளையல் அணிந்த தன் கைகளால் தலையில் அணிந்திருந்த பூவை சரி செய்துகொண்டாள்.

மேலும் சொல்கிறேன், கேளுங்கள், பாருங்கள்.

துணியில் கொட்டி வைத்திருக்கும் பூவைப்போல் வையையில் நீர் ஓடுகிறது என்று சொல்லிக்கொண்டு ஊரே மகிழ்ந்தது. உரையாடல்களும் அங்கே உயர்ந்தன. அதனால் வையை போர்க்களம் போலத் தென்பட்டது. காளையர் மார்பில் பூசிய சந்தனமும், கன்னியர் மார்பில் பூசிய தகரமும் கலந்து பாய்ந்து வையை மணல் சேறானது. உடுத்திய துணிகள் நனைந்தன. கரை கருமையானது. வானளாவ மணம் கமழ்ந்தது. இது புனல்-விளையாட்டுப் புனல்.

எங்கும் இன்பம். எங்கும் பேரழகு. எங்கும் மகிழ்ச்சி ஆரவாரம்.

மதுரை மூதூர், வையை இரண்டும் நல்லது, நல்லது, நல்லது.

இதன் புகழ் உலகமே கொள்ளாது.
